# TET 2013 PAPER I

## PAPER I – 2013 ORIGINAL

## பகுதி I

### குழந்தை மேம்பாடு மற்றும் கற்பித்தல்

**இப்பகுதியில் 30 வினாக்கள் உள்ளன. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.**

1. ஒரு ஆண் குழந்தை தன் தந்தையை விட தாயிடம் அதிக அன்பு செலுத்தும் பண்பினை ____________ என அழைக்கிறோம்.
   A. மனப்பான்மை    **B. இடிப்பஸ் மனப்பான்மை**
   C. எலக்ட்ரா மனப்பான்மை    D. தாழ்வு மனப்பான்மை

2. நுண்ணறிவுச் சோதனைகளை குழந்தைகள் தங்கள் வயதுக்கேற்ப சிறப்பாகச் செய்கிறார்கள் என்று கருதிய உளவியலாளர்
   A. ஜே.எம்.சி. கேட்டெல்    **B. ஆல்பிரட் பினே**
   C. சர். பிரான்சிஸ் கால்டன்    D. உட்வொர்த்

3. குழந்தைகளின் கவனத்தை மிக விரைவாக ஈர்ப்பதற்கு ஆசிரியர் பயன்படுத்த வேண்டியது
   **A. உண்மைப் பொருள்கள்**    B. வண்ணப் பொருள்கள்
   C. வண்ணப் படங்கள்    D. நகரும் பொருள்கள்

4. விஞ்ஞானிகளின் சிந்தனை, இச்சிந்தனைக்கு ஓர் எடுத்துக்காட்டு
   A. உறுதிச் சிந்தனை    B. புலனாகா சிந்தனை
   **C. புதுமைச் சிந்தனை**    D. பிரதிபலிப்புச் சிந்தனை

5. மாணவர்களிடம் சமூக வளர்ச்சியை ஏற்படுத்த இச்செயல்பாட்டைக் கொடுக்கலாம்
   A. கல்விச் செயல்பாடு    B. மதிப்பீட்டுச் செயல்பாடு
   C. வீட்டுச் செயல்பாடு    **D. பாட இணைச் செயல்பாடு**

6. விடை ‘B’ என்றால் வினாக்கள் என்னவாக இருக்கும் என்று ஓர் ஆசிரியர் மாணவர்களிடம் கேட்கிறார். இது

A. அறிவை உருவாக்குவதற்காகக் கற்பித்தலாகும்

B. கணக்கில் ஆழ்ந்த அறிவை சோதிப்பதாகும்

**C. அறிவைப் பயன்படுத்த கற்பித்தலாகும்**

D. தேர்வுக்காகக் கற்பித்தலாகும்

7. ‘மனிதன் பறவையைப் பார்த்து விமானம் கண்டு பிடித்தான்’ கீழ்க்கண்ட கருத்துக்களில் இக்கூற்றுடன் மிகவும் தொடர்புடையது எது?

A. செயல்படு ஆக்க நிறையுறுத்தல்

B. எதிர்மறைப் பயிற்சி மாற்றம்

C. கற்கக் கற்றல்

**D. அறிதலை அறிந்துணர்தல்**

8. C.C.E. என்பதன் விரிவாக்கம் என்ன?

A. தொடர் மற்றும் முழுமையான கல்வி

B. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு

**C. அறிவு சார்ந்த மற்றும் சிக்கலான மதிப்பீடு**

D. அறிவு சார்ந்த மற்றும் ஆக்கபூர்வமான கல்வி

9. ஆசிரியர் மாணவர்களின் ஆக்கத்திறனை அளந்தறிய பயன்படுத்தும் உத்திகளில் ஒன்று

**A. மூளைதாக்கு** B. மூளை உருவாக்கம்

C. மூளை சலவை D. மூளை செலவு

10. “இருப்பதில் சிறந்தவற்றை குழந்தைகளுக்கு வழங்க மனித இனம் கடன்பட்டுள்ளது” என ஐ.நா. சபை பிரகடனம் செய்த ஆண்டு

A. 1958, November 20 B. 1959, November 20

C. 1958, December 20 D. 1959, December 20

11. குறிப்பிட்ட பாடப் பகுதியினைக் கற்றபின் அப்பகுதியை முறைமைப்படுத்தி அதிலுள்ள தொடர்புக் கருத்துக்களின் அடிப்படையில் உருவாக்கப்படுவது

**A. பொதுமைக் கருத்துப்படம்** B. தொடர் விளக்கப்படம்

C. பொருத்து விளக்கப்படம் D. மன வரைபடம்

12. மாணவர்கள் எளிதாக பல பொதுமைக் கருத்துக்களை புரிந்து கொள்ள, தனது கற்பித்தலில் ஆசிரியர் செய்ய வேண்டிய செயல்

**A. மாணவர்களுக்கு தெரியாத பொதுமைக் கருத்திலிருந்து துவங்கி தெரிந்த பொதுமைக் கருத்தை எடுத்துரைத்தல்**

B. சிக்கலான பொதுமைக் கருத்திலிருந்து துவங்கி எளிய பொதுமைக் கருத்தை எடுத்துரைத்தல்

C. குழப்பத்தை விளைவிக்கும் ஒத்த பொதுமைக் கருத்துக்களை பல்வேறு கால கட்டத்தில் எடுத்துரைத்தல்

D. புலன் தொடர்பற்ற பொதுமைக் கருத்திலிருந்து துவங்கி புலன் தொடர்புடைய குறிப்பிட்ட பொதுமைக் கருத்தை எடுத்துரைத்தல்

13. கற்றலுக்கு உதவும் உளம் சார்ந்த காரணி

A. வகுப்பறைச் சூழல் B. குடும்பம்

**C. திறமை** D. உடல் நலம்

14. தொலைக்காட்சி கல்வி பரவலுக்குப் பெருமளவில் பயன்படுத்தப்படும் விண்கோள்

A. ஆப்பிள் B. ஆரியப்பட்டா

**C. இன்சாட் - 1** D. சந்திராயன்

15. படைப்போரின் பார்வையில், கற்றலுக்குத் தொடர்பில்லாதது

A. தெரிந்த கருத்துக்களோடு புதிய கருத்துக்களை இணைத்தல்

B. தெரிந்த கருத்துக்களோடு புதிய கருத்துக்களை இணைத்து சொந்த அறிவை உருவாக்குதல்

C. சொந்த அறிவை உருவாக்கும் போது புதிய கருத்துக்களுக்ளே முக்கியத்துவம் தருதல்

**D. தெரிந்த கருத்துக்களை இணைக்காமல் சொந்த அறிவை உருவாக்குதல்**

16. குழந்தைகள், பெரியோர்களை தொடர்ந்து பல கேள்விகளைக் கேட்டு நச்சரிப்பது இதனை வெளிப்படுத்தும்

**A. அறியாமை** B. ஆச்சரிய உணர்வு

C. குழப்ப உணர்வு D. தொல்லை செய்யும் உணர்வு

17. பள்ளிப் பருவ குழந்தைகளிடம் மன எழுச்சி வளர்ச்சியினை அதிகமாக பாதிப்பவர்

A. பெற்றோர் B. குடும்ப நபர்

C. நண்பர் **D. ஆசிரியர்கள்**

18. ஒழுக்க வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பது

**A. மனப்பான்மை** B. மனசாட்சி

C. மனத்திறன் D. எண்ணங்கள்

19. ஒருவர் தனது தேவைகள், விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை சமூகம் ஏற்றுக் கொள்ளும் வகையில் நிறைவு செய்து கொள்ளும் திறமையே ஒருங்கிணைந்த ஆளுமை (Integrated personality) என்று கூறியவர்

A. ஜான் டூவி B. எரிக்சன்

C. ஹர்லாக் D. கார்டனர்

20. தற்போது பள்ளிக் கல்வியின் மூலம் குழந்தைகள் அடைய வேண்டுமென சமூகம் எதிர்பார்ப்பது

A. நற்சிந்தனை B. தர்ம சிந்தனை

C. அறிவுத்திறன் **D. நல்லொழுக்கம்**

21. மையலின் ஷீத் எதனால் ஆனது

A. புரதம் மட்டும் **B. புரதம் மற்றும் கொழுப்பு**
C. கொழுப்பு மட்டும் D. கார்போஹைட்ரேட் மற்றும் கொழுப்பு

22. குழந்தைகளின் உடல் வளர்ச்சி எந்த வயதில் மிக உச்சகட்டத்தில் காணப்படுகிறது.
A. 0 - 2 வயதில் **B. 2 - 6 வயதில்**
C. 6 - 12 வயதில் D. 12 - 19 வயதில்.

23. Adolescence என்பதன் பொருள்
A. முதிர்ச்சியடைய B. உருவாக்க
C. சிந்திக்க **D. வளர்ச்சியடைய**

24. பெற்றோர்களால் கடைபிடிக்க வேண்டிய மூன்று 'A'க்கள்
**A. Accept, Affectionate, Appreciate**
B. Accept, Adjust, Appreciate
C. Accept, Adjust, Analyse
D. Accept, Assist, Appreciate

25. அன்பு, பொறாமை மற்றும் பரிவு போன்றவை _________ வகையான மனவெழுச்சிகளாகும்.
A. முதன்மைக் குறிக்கோளை நோக்கிய மனவெழுச்சி
B. புலன் உணர்வுகளால் தூண்டப்பட்ட மனவெழுச்சி
**C. மற்றவர்களுடன் தொடர்புடைய மனவெழுச்சி**
D. சுயமதிப்பிற்கான மனவெழுச்சி

26. எக்கல்வி முறையில் குழந்தைகள் சக மாணவர்களுடன் ஆசிரியர்களுடன் இடைவினையாற்றும் வாய்ப்பு அதிகம்
A. குருகுலக் கல்வி முறை B. விரிவுரை முறை
C. பாரம்பரிய முறை **D. செயல் வழிக்கற்றல் முறை**

27. பள்ளிக் கல்வியின் மூலம் நான்கு விதமான கற்றல் திறன்களை வளர்க்க வேண்டும் என கூறும் அறிக்கை
A. டெலார்ஸ் அறிக்கை B. கோத்தாரி அறிக்கை
C. இராதா கிருஷ்ணன் அறிக்கை D. புதிய கல்வி கொள்கை அறிக்கை

28. விளைவு விதிக்கு மற்றொரு பெயர்
A. பயிற்சி விதி B. ஆயத்த விதி
C. உடன் இணைத்தல் விதி **D. பரிசு மற்றும் தண்டனை விதி**

29. ஒரு குழந்தை சாவியை எடுத்து சரியான முறையில் கதவைத் திறப்பது என்பது எவ்வகைக் கற்றலுக்கு எடுத்துக்காட்டு
A. பிரச்சனையைத் தீர்த்தல்
B. உட்காட்சி கற்றல்
C. தூண்டல் துலங்கல் தொடர்பு கற்றல்
**D. இயக்கத் தொடர் கற்றல்**

30. கீழ்வரும் கல்வி விளையுறு பயன்களில் செயல்படு ஆக்க நிலையுறுத்திக் கற்றலுக்குப் பொருந்தாதது எது?

**A. சூழ்நிலையை மாற்றுவதன் மூலம் கற்போரின் நடத்தையை ஆசிரியர் மாற்றியமைக்க முடியும்**

B. வெகுமதி அளிப்பதன் மூலம் விரும்பும் நடத்தையை ஆசிரியர் மாற்றியமைக்க முடியும்

C. தீர்வுக்கான சிக்கலை மாணவர்களுக்கு கொடுப்பதற்கு முன் அவர்களின் திறமையை ஆசிரியர் கருத்தில் கொள்ள வேண்டும்

D. பாடப் பகுதியானது சிறுசிறுப் பகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டும்

## பகுதி II
## தமிழ்

**இப்பகுதியில் 30 வினாக்கள் உள்ளன. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.**

31. ஆசிரியப்பாவின் சிற்றெல்லை

A. 2 அடி **B. 3 அடி**

C. நான்கடி D. அடி வரையறை இல்லை

32. பொருத்துக.

a) நான்காம் வேற்றுமை 1) ஆக்கல், அழித்தல், ஒத்தல், உடைமை

b) இரண்டாம் வேற்றுமை 2) நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது

c) ஐந்தாம் வேற்றுமை 3) கொடை, பகை, நட்பு, முறை

d) மூன்றாம் வேற்றுமை 4) கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 4 | 3 | 2 | 1 |
| B. | 2 | 1 | 3 | 4 |
| **C.** | **3** | **1** | **2** | **4** |
| D. | 1 | 3 | 4 | 2 |

33. பின்வருவனவற்றுள் எவை இடைச்சொல் அல்ல?

A. சீசீ, கூகூ, போல, ஏ B. கொல், ஐயம், அந்தில், ஆங்கு

C. ஓடு, தெய்ய, மற்றை, மன் **D. கலி, கடி, குரை, கிளவி**

34. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. இக்குறளில் பயின்று வரும் அணி யாது?

A. உவமையணி B. உருவக அணி

**C. எடுத்துக்காட்டு உவமையணி** D. பின்வருநிலையணி

35. ஆய்க

1) ஏ முன் உயிர் வர யகரம், வகரம் உடம்படு மெய்யாக வரும்

2) இ, ஈ, ஐ, முன் உயிர் வர வகரம் உடம்படு மெய்யாக வரும்

**A. 1 சரி 2 தவறு** B. 1, 2ம் சரி
C. 1 தவறு 2 சரி D. 1, 2ம் தவறு

36. மன்னர்களை மட்டும் மகிழ்வித்து வந்த கவிதை மரபை மாற்றியவர்
A. நா. பிச்சமூர்த்தி B. வல்லிக்கண்ணன்
C. கு. இராசகோபாலன் **D. பாரதியார்**

37. குமரகுருபரரின் காலம்
A. பதினாறாம் நூற்றாண்டு **B. பதினேழாம் நூற்றாண்டு**
C. பதினெட்டாம் நூற்றாண்டு D. பத்தொன்பதாம் நூற்றாண்டு

38. ‘நாஞ்சில் நாடு’ என்று அழைக்கப்படும் மாவட்டம்
A. கோயம்புத்தூர் மாவட்டம் B. நீலகிரி மாவட்டம்
**C. குமரி மாவட்டம்** D. திருநெல்வேலி மாவட்டம்

39. “தமிழ் மொழி அழகான சித்திர வேலைப்பாடமைந்த வெள்ளித்தட்டு; திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள்” என்று கூறியவர்
A. மாக்சுமுல்லர் B. கெல்லட்
C. அமினோ **D. டாக்டர் கிரௌஸ்**

40. பின்வரும் செய்யுள் வரிகளில் குமரகுருபரர் எழுதியது
A. “அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்து
இருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்த”
B. “உடலின் உறுதி உடையவரே
உலகின் இன்பம் உடையவராம்”
C. “பகைவனுக் கருள்வாய் - நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய்”
**D. “வாங்கும் கவளத்து ஒரு சிறிது வாய் தப்பின்”**

41. நடுவணரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்த ஆண்டு
A. 2003 **B. 2004**
C. 2005 D. 2006

42. “மானம் பெரிதென உயர் விடுவான்;
மற்றவர்க் காகத் துயர்படுவான்”
என்ற பாடல் வரியின் ஆசிரியர்
A. திரு.வி.க. **B. நாமக்கல் கவிஞர்**
C. கவிமணி D. பாரதிதாசன்

43. ‘உரைமணிகள்’ என்ற நூலை எழுதியவர்

**A.** **கவிமணி** B. முடியரசன்
C. நா. பிச்சமூர்த்தி D. தணிகை உலகநாதன்

44. காமராசர் தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக பதவி ஏற்ற ஆண்டு

**A.** **1954** B. 1955
C. 1956 D. 1957

45. திருக்குறளில் "உடைமை" என்னும் சொல்லில் அமைந்த அதிகாரங்களின் எண்ணிக்கை

A. 8 **B.** **9**
C. 10 D. 11

46. தொழிலும், காலமும் தோன்றி பால்வினை ஒழிய நிற்பது

**A.** **வினையெச்சம்** B. தெரிநிலை பெயரெச்சம்
C. பெயரெச்சம் D. முற்றெச்சம்

47. கூற்றை ஆய்க.

1. சால, தவ என்னும் உரிச்சொற்கள் பின்வரும் வல்லினம் மிகும்
2. விளித்தொடரை அடுத்து வரும் வல்லினம் மிகாது
3. ஓரெழுத்து ஒரு மொழியில் வரும் க், ச், த், ப் மிகாது
4. அது, எது எனும் சுட்டுச் சொற்களை அடுத்து வரும் வல்லினம் மிகும்

A. 2, 3 சரி **B.** **1, 2 சரி**
C. 1, 3, 4 சரி D. 2, 3, 4 சரி

48. பொருத்தமில்லாதவற்றை தேர்ந்தெடுக்க.

A. தாழ்குழல் வந்தாள் - வினைத்தொகைப் புறத்து பிறந்த அன்மொழித் தொகை
**B.** **தகர ஞாழல் சென்றாள் - உவமைத் தொகை புறத்து பிறந்த அன்மொழித் தொகை**
C. பொற்றொடி வந்தாள் - வேற்றுமைத் தொகை புறத்து பிறந்த அன்மொழித் தொகை
D. கருங்குழல் இயம்பினாள் - பண்புத் தொகை புறத்து பிறந்த அன்மொழித் தொகை

49. பின்வருவனவற்றுள் எவை சரியானவை?

I) திணை வழுவமைதி - பசுங்கிளியார் சென்றார்
II) பால் வழுவமைதி - ஏவல் இளையர் தாய்
III) எம்பியை ஈங்குப் பெற்றேன் - இடவழுவமைதி
IV) யாம் முன்பு விளையாடுவது இச்சோலை - காலவழுவமைதி

A. I, II, IV மட்டும் சரி **B.** **அனைத்தும் சரி**

C. III, I, II மட்டும் சரி D. I மட்டும் சரி

50. பிழைதிருத்தும் மனப்பழக்கம் என்ற நூலை இயற்றியவர்?

A. இளங்குமரனார்

B. பொன்னீலன்

**C. தமிழண்ணல் டாக்டர் இரா. பெரிய கருப்பன்**

D. ஈரோடு தமிழன்பன்

51. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

பனாட்டு – பிரித்தறிக.

A. பனை + அட்டு B. பனம் + அட்டு

C. பனா + அட்டு **D. பனம் + ஆட்டு**

52. கீழ்க்கண்ட கூற்றில் எவை சரியானவை?

I) ஆய்த எழுத்து சார்பெழுத்து அல்ல

II) ஆய்த குறுக்கத்திற்கு அரைமாத்திரை

III) வெ.ஃ.ஃ.குவார்க் கில்லை வீடு - இது ஒற்றளபெடை

IV) ஆய்த எழுத்து முதல் எழுத்தாகும்

A. I, III ம் சரி B. II, III ம் சரி

C. II மட்டும் சரி **D. III மட்டும் சரி**

53. கீழ்க்கண்டவற்றுள் அஃறிணையைச் சாராதவை?

A. களிறு B. பசுக்கள்

**C. நரகர்** D. தாவரங்கள்

54. கீழ்க்கண்ட கூற்றில் எவை தவறானவை?

1) பகுதி என்பது தத்தம் பகாப்பதங்களே

2) பகுபதம் ஆறு எழுத்து ஈறாக வரும்

3) பகாபதம் ஒன்பது எழுத்து ஈறாக வரும்

4) இடை, உரி இரண்டும் பகுபதம் ஆகும்

A. 2, 3 மட்டும் தவறானவை **B. 2, 4 மட்டும் தவறானவை**

C. 1, 4 மட்டும் தவறானவை D. 1, 3 மட்டும் தவறானவை

55. சரியானவற்றைத் தேர்ந்தெடுக்க.

A. ஆகாயம் - இலக்கணப்போலி

**B. முன்றில் - இலக்கணமுடையது**

C. கோவில் - குழூஉக்குறி

D. அருமந்தபிள்ளை - மரூஉ

56. “கொஞ்சும் கிளியின் குரலும் - கருங்
குயிலின் இசையும் அடடா!” என்று பாடியவர்

A. நாமக்கல் கவிஞர்
B. தணிகை உலகநாதன்
C. பாரதியார்
**D. அழ. வள்ளியப்பா**

57. தமிழுக்கான சிறப்பு அடைமொழிகள்

A. 110
B. 120
C. 130
D. 140

58. “இனிமைத் தமிழ் மொழி எமது – எமக்கு
இன்பம் தரும்படி வாய்த்தநல் அமுது” எனப் பாடியவர்.

**A. பாரதிதாசன்**
B. கண்ணதாசன்
C. கம்பதாசன்
D. கவிமணி

59. ‘பொதுமை வேட்டல்’ என்னும் நூலில் இடம் பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை

A. 431
**B. 430**
C. 428
D. 429

60. ‘தனிப்பாடல் திரட்டு’ என்னும் நூலை தொகுப்பித்தவர்

**A. இராமநாதபுரம் மன்னர் பொன்னுசாமி**
B. சந்திரசேகர கவிராசப் பண்டிதர்
C. திரிகூடராசப்பக் கவிராயர்
D. அண்ணாமலையார்

## PART III
## ENGLISH

61. Pick out from the following sentences the exact opposite of “The street was crowded”.

**A. The street was deserted**
B. The street was packed
C. The street was so noisy
D. There are so many people moving in the street

62. Pick out the correct sentence.

A. I herd the noise made by the running heard
B. I herd a heard racing past in the vally
C. I heard the noise of the fast approaching herd

D. I herd the pounding noise of the heard

63. Choose the correct expansion of the abbreviation ZSI

A. Zoo Summit International

B. Zion School of Intelligence

C. Zoological Society of Ireland

D. Zoological Survey of India

64. Choose the correct meaning of the word 'canner'.

A. A person who is very optimistic

**B. A person who preserves things in containers for sale**

C. A very rare bird

D. A person who uses sticks

65. Which of the following sentences means "My Apologies"?

A. I am gland to meet you

**B. I am very sorry**

C. I am fine

D. My sincere thanks to you

66. My favourite flower is __________ rose.

A. a **B. the**

C. an D. this

67. A verb which does not take an object is

**A. Intransitive verb** B. Adverb

C. Transitive verb D. Proverb

68. If I ———— a fish, I would swim.

A. was B. am

**C. were** D. have

69. He received blow ______ blow.

A. on B. for

C. in D. of

70. Be + main verb + ing form is ________tense.

A. Simple **B. Continuous**

D. A sentence with a finite verb

78. Pick out the plural form of deer.

A. deers
B. dear
**C. deer**
D. dears

79. How many syllables are there in the word 'edification'?

**A. Five**
B. One
C. Six
D. Seven

80. Identify the figure of speech employed in the following line.

"Who loves the trees best?" I said the Spring.

A. Simile
**B. Personification**
C. Metaphor
D. Alliteration

81. Identify the sentence pattern.

Computer keeps children busy.

A. SVIODO
B. SVOA
**C. SVOC**
D. SVCA

82. Which among the following is not associated with 'Punctuation'?

A. Full stop
B. Apostrophe
**C. Conjunction**
D. Hyphen

83. Choose the correct word for phonetic transcription.

[93 : 1]

A. goal
B. glum
C. glow
**D. girl**

84. Frame question for the following sentence.

I go to the market twice a week.

A. How long do you go to the market?
B. How much do you go to the market?
**C. How often do you go to the market?**
D. How many do you go to the market?

85. The mills of God grind slow _________ sure.

A. and **B. but**

C. that D. if

86. The number of syllables in the word 'ecological' is

A. Four B. Six

C. Three **D. Five**

Fill in the blanks by choosing the right options given along with each question.

87. Supply the suitable question tag.

Plants give out oxygen during the day ________?

A. do they **B. don't they**

C. did they D. didn't they

88. Supply a suitable suffix for the given word.

Sheep

A. ity B. ness

**C. ish** D. ism

89. Fill in the blank with suitable homophone.

The police controlled the

A. right **B. riot**

C. write D. rite

90. Supply the suitable relative pronoun.

I stayed with my grandmother _________ cooking was the best in the world.

A. What B. Whom C. Who **D. Whose**

## பகுதி IV

## கணிதம்

**இப்பகுதியில் 30 வினாக்கள் உள்ளன. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.**

91. கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்று எது?

A. 1 செமீ$^3$ = 1 மிலி B. 1 டெசிமீ$^3$ = 1 லி

**C. 1 மீ$^3$ = 100 லி** D. 1000 செமீ$^3$ = 1 லி

Explanation: **1 மீ$^3$**=1000 ltr

92. ஐந்திலக்க மிகச்சிறிய எண்ணின் முன்னிக்கும், நான்கிலக்க மிகப்பெரிய எண்ணின் தொடரிக்கும் உள்ள வித்தியாசம்

A. 100 B. 1000

C. 10000 **D. 1**

Explanation: 10000 – 9999 = 1

93. மதிப்பு காண்க : $1 \div [1+1 \div [1+1 \div (1+1 \div 2)]]$

A. $\frac{1}{2}$ **B. $\frac{5}{8}$**

C. $\frac{8}{5}$ D. 2

94. $\sqrt{3} = 1.732$ எனில் $\frac{1}{\sqrt{3}}$ =

A. 5.196 B. 1.732

**C. 0.543** D. 0.732

95. 07 : 15 மு.ப.விற்கும் 09 : 03 பி.ப.விற்கும் உள்ள நேர இடைவெளி

A. 2 ம 12 நி B. 1 ம 48 நி

**C. 13 ம 48 நி** D. 14 ம 48 நி

96. 'S' என்ற எழுத்தின் சுழற்சிக் கோணம்

A. 90° **B. 180°**

C. 270° D. 360°

97. ஒரு வகுப்பிலுள்ள 40 மாணவர்களின் சராசரி எடை 42 கி.கி. அவ்வகுப்பு ஆசிரியர் எடையினையும் சேர்த்தால் சராசரி 1 அதிகரிக்கிறது எனில் அந்த ஆசிரியரின் எடை ___________ கி.கி.

A. 80 B. 75

**C. 83** D. 84

98. தனிவட்டியில் 8 வட்டி வீதத்தில் அசலானது ___________ ஆண்டுகளில் மூன்று மடங்காகும்.

A. 15 **B. 25**

C. 20 D. 10

99. தவறான கூற்று எது?

A. இரு இயல் எண்களின் கூடுதல் ஒரு இயல் எண் ஆகும்

B. இரு முழு எண்களின் பெருக்கற்பலன் ஒரு முழு எண் ஆகும்

**C. இரு விகிதமுறா எண்களின் கூடுதல் ஒரு விகிதமுறா எண் ஆகும்**

D. ஒரு விகிதமுறு மற்றும் விகிதமுறா எண்களின் கூடுதல் ஒரு விகிதமுறா எண் ஆகும்

100. $1\frac{9}{16}$ ன் வர்க்கமூலம்

A. $1\frac{3}{4}$ B. $1\frac{2}{3}$

C. $2\frac{1}{4}$ **D.** $1\frac{1}{4}$

101. 1, 1, 2, 3, 5, 8, 13, 21 …. என்ற தொடரின் அடுத்த உறுப்பு

A. 29 B. 26


C. 31 **D. 34**

102. 67067 உடன் எதைக் கூட்ட முழு வர்க்கமாகும்?

**A. 14** B. 21

C. 7 D. 28

103.




படத்தில் உள்ள சமபக்க முக்கோணங்களின் மொத்தப் பரப்பு

A. 12 செமீ$^2$ B. $\sqrt{3}$ செமீ$^2$

C. $14\sqrt{3}$ செமீ$^2$ **D.** $12\sqrt{3}$ **செமீ**$^2$

104. 85 மீ நீளமும், 45 மீ அகலமும் கொண்ட சுவற்றில் வண்ணம் தீட்ட 1 சமீக்கு ` 8.80 வீதம் ஆகும் மொத்த செலவு

**A. ` 33,660** B. ` 33,600

C. ` 43,660 D. ` 27,660

105. 50 மாணவர்களின் சராசரி மதிப்பெண் 45 எனக் கணக்கிடப்பட்டது. பின்னர் 43 என்பது தவறுதலாக 73 என எடுத்துக் கொள்ளப்பட்டது, தெரிந்தது எனில் சரியான சராசரி

A. 44 B. 44.1

**C. 44.4** D. 44.5

106. சங்கர் ` 12 வீதம் 6 ஆப்பிள்களும், ` 3.50 வீதம் 12 ஆரஞ்சுகளும் வாங்கினான். கடைக்காரரிடம் ` 200 கொடுத்தால் மீதி வாங்க வேண்டிய தொகை

A. ` 114 B. ` 98

**C. ` 86** D. ` 102

107. 48ன் காரணிகளின் எண்ணிக்கை

A. 12 B. 124
C. 48 **D. 8**

108. ஒரு செங்கோண முக்கோணத்தில் ஒரு கோணம் $55^\circ$ எனில் மற்ற கோணம்
A. $55^\circ$ B. $100^\circ$
**C. $35^\circ$** D. $45^\circ$

109. முதல் 5 முழு எண்களின் வர்க்கங்களின் கூடுதல்
A. 31 **B. 30**
C. 55 D. 29

110. முதல் 10 இயல் எண்களின் சராசரி
**A. 5.5** B. 4.5
C. 5 D. 6.5

111. ஜனவரி 15, 2012 என்பது ஞாயிற்றுக் கிழமை எனில் மார்ச் 15, 2012 என்பது
A. திங்கள் **B. வியாழன்**
C. வெள்ளி D. புதன்

112. ஒரு சதுரத்தின் மூலைவிட்ட நீளம் $5\sqrt{2}$ செமீ எனில் அதன் பக்க அளவு
**A. 5 செமீ** B. 10 செமீ
C. $\frac{5}{\sqrt{2}}$ செமீ D. $10\sqrt{2}$ செமீ

113. பின்வருவனவற்றுள் பகா எண்
A. 156 B. 187
C. 289 **D. 173**

114. 4 மீ 95 செமீ, 9 மீ மற்றும் 16 மீ 65 செமீ ஆகிய நீளங்களை சரியாக அளக்கக் கூடிய மிகப்பெரிய நீளம்
A. 35 செமீ **B. 45 செமீ**
C. 55 செமீ D. 65 செமீ

115. 1.75, 5.6, 7 ஆகியவற்றின் மீ.பொ.வ.
A. 0.07 B. 0.7
C. 3.5 **D. 0.35**


116. 7x5462 என்ற எண் 9 ஆல் மீதியின்றி வகுபடும் எனில் x-ன் குறைந்தபட்ச மதிப்பு
A. 6 **B. 3**
C. 9 D. 7

117. $7^2 + 8^2 + 56^2 =$

A. $61^2$ B. $59^2$
**C. $57^2$** D. $63^2$

118. கணித மேதைகளின் சக்கரவர்த்தி
A. சகுந்தலா தேவி B. இராமானுஜர்
C. பித்தாகரஸ் **D. காஸ்**

119.




படத்தில் x-ன் மதிப்பு
A. 60° **B. 115°**
C. 55° D. 130°

120. $x+\frac{1}{x}=2$ எனில் $x^2+\frac{1}{x^2}=$
A. 14 B. 3
**C. 2** D. 1

## பகுதி V
## சூழ்நிலை அறிவியல்

**இப்பகுதியில் 30 வினாக்கள் உள்ளன. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.**

121. இந்தியாவில் திட்ட நேரத்தை காட்டும் அணுக்கடிகாரம் வைக்கப்பட்டுள்ள இடம்
A. மும்பை B. சென்னை
**C. புதுதில்லி** D. கொல்கத்தா

122. மரபு சாரா ஆற்றல் மூலத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு
A. காற்று ஆற்றல் B. நீர் ஆற்றல்
C. சூரிய ஆற்றல் D. உயிரினத் தொகுதி
Both C & D

123. ஹென்றி பெக்கொரல் என்பவர் பிறந்த ஆண்டு
**A. 1852** B. 1745
C. 1791 D. 1956

124. பேருந்தில் தூங்குபவர் முன்னும் பின்னும் விழுவதன் காரணம்
A. பெருமூளை ஓய்வில் இருப்பதால்

**B.** **சிறுமூளை ஓய்வில் இருப்பதால்**

C. முகுளம் ஓய்வில் இருப்பதால்

D. நரம்பு மண்டலம் ஓய்வில் இருப்பதால்

125. நன்னீர் அட்டையின் உமிழ்நீர் சுரப்பியில் இருந்து சுரக்கப்படும், பாலூட்டிகளின் இரத்தம் உறைதலைத் தடை செய்யும் நொதி, கீழ்க்கண்டவற்றுள் எது?

A. குவானைன் B. அடினைன்

C. தையமின் **D.** **ஹிருடின்**

126. பூமியின் ___________ நிலையானதாக இல்லை.

**A.** **கருவம்** B. நை.ஃ.ப்

C. கவசம் D. மேலோடு

127. தமிழ்நாட்டின் காலநிலை ___________ வகையைச் சார்ந்தது.

**A.** **அயன மண்டலம்** B. மிதவெப்ப மண்டலம்

C. துருவப் பகுதி D. ஆர்டிக் பகுதி

128. இந்திய யூனியன் மற்றும் குடியரசின் தலைவர்

A. சபாநாயகர் B. குடியரசு துணைத் தலைவர்

**C.** **குடியரசுத் தலைவர்** D. உச்ச நீதிமன்ற நீதிபதி

129. நில அளவு அடிப்படையில் இந்தியா உலகின் ___________ பெரிய நாடாகத் திகழ்கிறது.

A. இரண்டாவது B. ஐந்தாவது

**C.** **ஏழாவது** D. எட்டாவது

130. எதிர்கட்சி தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அந்தஸ்து

**A.** **காபினட் அமைச்சர்** B. இணை அமைச்சர்

C. மாநில அமைச்சர் D. அமைச்சரவை அமைச்சர்

131. இபின் பதுாதா ___________ நாட்டைச் சேர்ந்தவர்.

**A.** **மொராக்கோ** B. சூடான்

C. போர்ச்சுகல் D. ஸ்பெயின்

132. கடைச்சங்க காலத்திற்கு முன்னரே தோன்றிய இலக்கண நூல்

A. தண்டியலங்காரம் B. நன்னூல்

**C.** **தொல்காப்பியம்** D. யாப்பெருங்கலம்

133. சூரியனில் அதிகளவில் காணப்படும் வாயு

A. மீத்தேன் **B.** **ஹைட்ரஜன்**

C. ஆர்கான் D. ஆக்ஸிஜன்

134. தென்மேற்கு பருவக்காற்று திசைக்கு இணையாக அமைந்துள்ள மலைகள்

**A. ஆரவல்லி** B. சாத்பூரா

C. விந்தியா D. மைக்காலா

135. தேயிலை, காப்பி, இரப்பர், மிளகு மற்றும் முந்திரி போன்றவை தமிழ்நாட்டில் வளரும் ___________ பயிராகும்.

A. உணவு B. இழை

**C. தோட்டப்** D. மற்ற பயிர்

136. கீழ்வரும் புகைப்பதால் வரும் தீமைகளுள் எவை சரியான இணை இல்லை.

1) இதயம் - ஆர்த்தோஸ் கிளீரோசிஸ்

2) நுரையீரல் - பித்தப் பையில் பித்தக் கற்களை உண்டாக்குதல்

3) எலும்புகள் - ஆஸ்டியோபோரோசிஸ்

4) செரித்தல் தொகுப்பு - காற்றுச் சிற்றறைகள் பாதிக்கப்படுதல்

**A. 2)ம் 4)ம்** B. 1)ம் 3)ம்

C. 1)ம் 4)ம் D. 1)ம் 2)ம்

137. டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் ஒட்டுண்ணியைப் பரப்பும் உயிரி, கீழ்க்கண்டவற்றுள் எது?

A. அனா∴பிலிஸ் கொசு **B. ஏடிஸ் கொசு**

C. வீட்டு ஈ D. கியூலக்ஸ் கொசு

138. அச்சுறுத்தப்பட்ட சிற்றினங்கள் அல்லது அழியும் நிலையின் விளிம்பில் உள்ள விலங்குகள் பற்றிய பதிவுகளைக் கொண்ட புத்தகம் இவ்வாறு அழைக்கப்படுகிறது.

**A. சிவப்புப் புள்ளி விவரப் புத்தகம்**

B. விலங்குகளின் வரலாறு

C. சிற்றினங்களின் தோற்றம்

D. மேற்கண்டவற்றுள் எதுவும் இல்லை

139. கீழ்க்கண்டவற்றுள் எது புதுப்பிக்க இயலா ஆற்றல் மூலம் இல்லை?

A. டீசல் B. இயற்கை வாயு

**C. மாட்டுச் சாணம்** D. நிலக்கரி

140. நான்கு அறைகள் கொண்ட இதயம் கீழ்க்கண்டவற்றுள் எவற்றுக்கு உண்டு?

**A. பாலூட்டிகள், பறப்பன** B. ஊர்வன, பறப்பன

C. நீர்நில வாழ்வன, பறப்பன D. பாலூட்டிகள், ஊர்வன

141. தூயநீர் என்பது ஒரு சேர்மம் இதில் ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் கலந்துள்ள நிறை விகிதம்

A. 11.19 % மற்றும் 31.81 % B. 11.19 % மற்றும் 88.81%

**C. 88.81 % மற்றும் 11.19%** D. 33.81% மற்றும் 11.19%

142. ${}_{92}U^{238}$ என்ற ஐசோடோப்பில் உள்ள நியூட்ரான்களின் எண்ணிக்கை

A. 330 B. 92

**C.** **238** D. 146

143. $20^{\circ}C$ வெப்பநிலையில் நீரில் $CuSO_4$ ன் கரைதிறன்

A. 36 கிராம் B. 20.90 கிராம்

C. 20.7 கிராம் D. 70.2 கிராம்

**Note: Question Number: 143 Wrong**

144. ஓசோனின் அணுநிறை 16, மூலக்கூறு நிறை 48 எனில் அதன் அணுகட்டு எண்

**A.** **3** B. 1/3

C. 1 D. ஏதும் இல்லை

145. நேர்கோட்டுத் திசைவேகத்திற்கும் கோணத்திசை வேகத்திற்கும் உள்ள தொடர்பு

A. $V = r\theta$ **B.** $V = r\omega$

C. $r = V\omega$ D. $\omega = V\theta$

146. இந்தியாவின் இரும்பு மனிதர் என அழைக்கப்பட்டவர்

A. பிஸ்மார்க் **B.** **சர்தார் வல்லபாய் படேல்**

C. கான் அப்துல் காபர் கான் D. தாதாபாய் நௌரோஜி

147. சீனப் பயணி யுவான் சுவாங் எழுதிய பயண நூல்

A. ஹர்ஷ சரிதம் B. இண்டிகா

**C.** **சியூக்கி** D. ரத்னாவளி

148. நவீன இந்தியாவின் விடிவெள்ளி

A. தயானந்த சரஸ்வதி B. அன்னிபெசண்ட்

**C.** **இராஜாராம் மோகன் ராய்** D. சையது அகமது கான்

149. இந்திய இருப்புப் பாதையின் தந்தை

A. வில்லியம் பெண்டிங் B. கர்சன் பிரபு

C. வெல்லெஸ்லி பிரபு **D.** **டல்ஹௌசி பிரபு**

150. தேசியப் பாடல் “வந்தே மாதரத்தை” இயற்றியவர்

A. பால கங்காதர திலகர் **B.** **பக்கிம் சந்திர சட்டர்ஜி**

C. ரவீந்திர நாத் தாகூர் D. தேவேந்திரநாத் தாகூர்